A3
014522
DIRECTORATE OF TRIBAL WELFARE
0 9 DEC 2021
CHEPAUK, CHENNAI-5

## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – 2021-2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை – மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் புதிய அறிவிப்புகள் - ரூ.2 கோடி மதிப்பீட்டில், 2000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தலா ரூ.10,000/- மானியத்தில், புதிய மின்மோட்டார் வாங்கிட நிருவாக அனுமதி வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉதி)துறை

**அரசாணை (நிலை) எண். 102** **நாள்:06.12.2021**

**பிலவ வருடம், கார்த்திகை 20 ஆம் நாள்**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**

படிக்கப்பட்டது:-

தாட்கோ மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடிதஎண்.ஜி1/1730/2021. நாள் 29.09.2021.

*******

**ஆணை:-**

2021-2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு-செலவு கூட்டத்தொடரில் துறை மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள், கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்கள்:-

> **"தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் (தாட்கோ) மூலம் 1800 ஆதிதிராவிடர் மற்றும் 200 பழங்குடியின விவசாயிகள் தங்கள் நிலம் மேம்பாட்டிற்காக புதிய மின் மோட்டார் அல்லது பழைய மின் மோட்டாருக்கு பதில் புதிய மின் மோட்டார் வாங்கிட தலா ரூ.10000 மானியமாக வழங்கப்படும். இதற்காக அரசு ரூ.2.00 கோடி செலவு மேற்கொள்ளும்."**

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக, மேலே படிக்கப்பட்ட, தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துருவில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் தங்கள் நிலமேம்பாட்டிற்காக ஆழ்துளை கிணறு மற்றும் திறந்தவெளி கிணறுகள் மூலம் நீர் பாசனத்திற்கு

01457



பயன்படுத்தப்படும் புதிய மின்மோட்டார் அல்லது பழைய மின் மோட்டாருக்கு பதில், புதிய மின் மோட்டார் வாங்குவதற்கு ஒரு விவசாயிக்கு ரூ.10,000/- வீதம், 1800 ஆதிதிராவிட விவசாயிகள் மற்றும் 200 பழங்குடியின விவசாயிகள், ஆக மொத்தம் 2000 விவசாயிகள் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தினை தாட்கோ மூலம் செயல்படுத்துவதற்கு ரூ.2.00 கோடி வழங்கிடவும், ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த 1800 பயனாளிகளுக்கான ரூ.1.80 கோடி செலவினத்தை PMAJAY (SCA-SCSP) ஒன்றிய அரசின் நிதி திட்டத்தில் இருந்தும், 200 பழங்குடியின பயனாளிகளுக்கான ரூ.20 இலட்சம் செலவினத்தை மாநில அரசு நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

3. மேலும் இத்திட்டப்படி, ஒரே விவசாயி நீர் பாசன வேளாண்மை சார்ந்த நான்கு விதமான (1. Sinking of Shallow tubes, 2.Installation of Diesel pump set / Electric Motor, 3. Laying of Conveyance Pipes, 4. Construction of Ground Level Storage Stucture) மானியத் திட்டங்களைப் பெற வாய்ப்புள்ளது எனவும், மேற்படி திட்டத்தில் மின் மோட்டார் அல்லது டீசல் பம்ப் செட்டிற்கும் மானியம் வழங்கிட ஒப்புதல் வழங்கக் கோரியுள்ளார். மேலும், இதுவரை துரித மின் இணைப்பு கோரி SC/ST விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட 5977 விண்ணப்பங்களில் இந்த நிதியாண்டில் 1000 SC/STவிவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட உள்ளது என்றும் எனவே, மின் இணைப்பு பெற காத்திருக்கும் விவசாயிகள் தற்சமயம் டீசல் இஞ்சின் பம்ப்பை பயன்படுத்தி விவசாயம் மேற்கொள்ள ஏதுவாக, மேற்படி மானிய திட்டத்தில் டீசல் இஞ்சின் பம்ப் வாங்கும் விவசாயிக்கும் மானியம் வழங்கவும், இது குறித்து ஆணை பிறப்பிக்குமாறும் தாட்கோ மேலாண்மை இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

4. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பான, தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. அதனடிப்படையில் தாட்கோ, மேலாண்மை இயக்குநரின், கருத்துருவினை ஏற்று ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த 1800 விவசாயிகளுக்கும், பழங்குடியினத்தைச் சேர்ந்த 200 விவசாயிகளுக்கும் ஆக மொத்தம் 2000 விவசாயிகளுக்கு தங்கள் நில மேம்பாட்டிற்காக புதிய மின் மோட்டார் அல்லது பழைய மின் மோட்டாருக்கு பதில் புதிய மின் மோட்டார் வாங்கிட தலா ரூ.10,000/- மானியமாக வழங்கத் தேவைப்படும் நிதி ரூ.2.00 கோடி செலவினத்திற்கு நிருவாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது. மாவட்ட வாரியான பயனாளிகளின் விவரங்கள் இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் இத்திட்டத்தினை உரிய வழிகாட்டு முறைகள்

(Guidelines) வகுத்து செயல்படுத்திட நடவடிக்கை எடுக்குமாறு தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி 4-இல் நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்ட ரூ.2 கோடி தொகையில் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு தலா ரூ.10,000/- வீதம் மானியமாக வழங்க ரூ.1.80 கோடி (ஒரு கோடியே எண்பது இலட்சம்)- செலவினத்தை ஒன்றிய அரசின் PMAJAY (SCA-SCSP) திட்ட நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், 200 பழங்குடியின விவசாயிகளுக்கு தலா ரூ.10,000/- வீதம் மானியமாக வழங்க ரூ.20 இலட்சம் (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) செலவினத்தை மாநில அரசின் நிதியிலிருந்தும் விடுவித்திடும் வகையில், உரிய கருத்துருவினை பயனாளிகளை தெரிவு செய்த பின்னர் அரசுக்கு அனுப்புமாறு, ஆதிதிராவிடர் நல ஆணையர் / பழங்குடியின நல இயக்குநர் / தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.43796/ நிதி(ஆதி(ம)பந)2021 நாள் 03.11.2021 - இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

**க. மணிவாசகன்,**
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், ஆதி திராவிடர் நலம், சென்னை-5.
இயக்குநர் ,பழங்குடியினர் நலம், சென்னை- 5.
மேலாண்மை, இயக்குநர், தாட்கோ, சென்னை -18.
அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர், (ஆதிதிராவிடர் நலம் ஆணையரகம் வழியாக).
அனைத்து மாவட்ட மேலாளார், தாட்கோ (தாட்கோ வழியாக).
மாநில கணக்காய்வுத் தலைவர் ,சென்னை 18/35
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-5/9.
மாவட்ட திட்ட அலுவலர் ,( பழங்குடியினர் நலம்).
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம் ,சென்னை-9.
ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை -9.